புரட்டாதி - ஐப்பசி
புதுமலர்: 18
இதழ்: 04

# அனல்

01.09.2021

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே **அனலாயிருங்கள்:**
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -

ஆசிரியர்: போதகர் வே.மகாராஜா



# கர்த்தருக்குப் பயப்படும் பயம்!

*Fear of God*

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனல்

## பொருளடக்கம்

01. அனலின் குரல்
02. கதையும் கற்றதும்
03. நற்செய்திப்பகுதி
04. வினா விடை - 105
05. வாலிபர் வளாகம்
06. பெண்கள் பக்கம்
07. சிறுவர் வட்டம்
08. அருட்பணியாளர் சரிதை
09. குறுக்கெழுத்துப்போட்டி - 103
10. அனலின் ஆன்மீக விருந்து
11. குணங்கள் மாறுமா?



## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

**எழுத வேண்டிய முகவரி:**

சீயோன் ஜெபக்குழு,
இல 29, 29/1,
இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anal",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலின் குரல்

கிறிஸ்துவுக்குள் அன்பான வாசக உள்ளங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

கடந்த ஆடி – ஆவணி மாதங்களிற்குரிய 'அனல்' சஞ்சிகையை வெளியிடமுடியவில்லை. காரணம் Covid 19 தாக்கத்தினால் ஏற்பட்ட முடக்க நிலையேயாகும். தயவு செய்து அனல் ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

கர்த்தருக்குள் மனமகிழ்ச்சியாக இருப்பீர்கள் என நம்புகின்றோம். ஏனெனில் எந்த சூழ்நிலையிலும் நம்முடைய புத்திக்கு மேலான தேவசமாதானம் எங்கள் இருதயங்களை ஆட்கொண்டிருக்கிறது. எனவே தேவ சமாதானத்தினாலே நிறைந்தவர்களாய் எப்படியான சூழ்நிலைகள் சூழ்ந்தாலும் தேவனுடன் உறுதியான உறவில் நிலைத்திருங்கள்; ஜெபத்திலே தரித்திருங்கள். 'நீதிமான்கள் செய்யும் ஊக்கமான ஜெபம் மிகவும் பெலமுள்ளது'.


உலகம் முழுமையும் கொடிய நோயைக் குறித்த பயத்தோடு சென்று கொண்டிருக்கின்றது. தேவபிள்ளைகளாக நாம் தேவனுடைய பாதத்தைப் பிடிக்க வேண்டிய நாட்கள் இந்நாட்கள். பாபேல்களைவிட்டு பணிவுடன் ஜெபிக்கும் நாட்களிது. எம்மைத் தாழ்த்தி தேவனுடைய முகத்தை தேடவேண்டிய நாட்கள் இந் நாட்கள். எமது பெயருக்காக அல்ல மற்றவர்களின் உயிருக்காக பரிந்து மன்றாடும் ஒரு மோசேயைப் போல தேவனைப் பற்றிப் பிடிக்க வேண்டும்.

இரட்சிக்கப்பட்ட தேவபிள்ளையே இந்தக் காலத்திலே நீ மௌனமாக இருந்தால் தேவனுக்கு கணக்கு கொடுக்கும் நாளிலே என்ன பதில் சொல்வாய். நாம் விரும்பினாலும் கூட அது செய்யப்படாது போகிறது. நாம் திட்டம் போட்டாலும் அது நிறைவேற்ற முடியாமல் போகின்றது. எனவே எல்லா வல்லமைகளுக்கும் மேலான ஒரு வல்லமை செயலாற்று கின்றது. அதுவே வானத்தையும் பூமியையும் உருவாக்கிய தேவனுடைய வல்லமை. ஆகவே எமது திட்டங்களைவிட்டு தேவனுடைய சித்தத்திற்கும் தேவனுடைய திட்டத்திற்கும் எம்மை அர்ப்பணிப்போம். உங்கள் ஒவ்வொருவரையும் தேவன் பாதுகாத்து ஆசீர்வதிப்பாராக.

- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதையும் கற்றதும்



## கண்டிப்பு நல்லது

❑ வை. விமலதாஸ்

ஒரு வீட்டில் அண்ணனும் தம்பியும் அவர்களுடைய அம்மா – அப்பாவும் வாழ்ந்து வந்தார்கள். இவர்களில் தம்பி மிகவும் குறும்புக்காரனாகவும் எப்போதும் ஏதோ ஒரு பிரச்சினையை ஏற்படுத்துகிறவனாகவும் இருந்தான். அவன் நன்றாக படிக்கமாட்டான், எப்போதும் பரீட்சையில் சிறந்த பெறு பேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியாதவனாகவும் இருந்தான். ஆனால் அண்ணன் மிகவும் பொறுப்புணர்வுள்ளவனும் நன்றாக படிக்கிறவனும், பெற்றோருக்கு உதவி செய்கிறவனாகவும் இருந்தான்.

இந்த தம்பியை அவனுடைய அண்ணா எப்போதும் திருத்திக் கொண்டே இருப்பான். 'தம்பி நீ இப்படிச் செய்வது தப்பு, நீ அங்கே செல்லாதே, அதைச் செய்யாதே, இப்படிச் செய்' என்று எப்போதும் கண்டித்துக் கொண்டே இருப்பான். ஆனால் தம்பிக்கு எப்போதும் அண்ணன் தன்னைத் திருத்துவது பிடிக்காது. ஏன்தான் நான் இவனுக்கு தம்பியாகப் பிறந்தேனோ, நான் அண்ணனாக இருந்திருந்தால் இவனை நான் கண்டித்து நடத்தியிருப்பேன். அண்ணன் எப்போதும் என்னை அதைச் செய்யாதே. இதைச் செய்யாதே என்று கண்டித்துக் கொண்டு இருக்கிறானே என்று சலித்துக் கொண்டான். 'நீ சொல்வதை செய்யமுடியாது போடா..' என்று அண்ணனை அலுத்துக் கொண்டான்.

இப்படி எப்போதும் அண்ணனுக்கும் - தம்பிக்கும் இடையில் வாக்குவாதம் நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். ஆனால் தம்பி அண்ணன் சொல்பவற்றைக் கேட்பதாக இல்லை. பாடசாலை பரீட்சை முடிந்ததும் தம்பியின் பரீட்சைத்தாளை எடுத்து அண்ணன் பார்ப்பான். தான் அந்த வகுப்பில் படிக்கும் போது அவனைவிட அதிகமான மதிப்பெண்களை பெற்றுக் கொண்டதை கண்டு தம்பியை பார்த்து 'கவனமாக படி, உன்னுடைய வயதில் நான் இருக்கும் போது அதிக மதிப்பெண்களை பெற்றிருக்கிறேன். ஆனால் நீ குறைவாகப் பெற்றிருக்கிறாய்' என்று அவனைத் திருத்திக் கொள்வான். மாத்திரமல்ல தம்பியின் பரீட்சைத் தாள்களை எடுத்து பெற்றோரிடம் காண்பித்து 'பாருங்கள் தம்பி மிகவும் குறைவாக மதிப்பெண்களை பெற்றிருக்கிறான், இவனைத் திருத்துங்கள்' என்று முறைப்பாடு செய்வான்.

ஆனால் அண்ணன் இவ்வாறு தன்னை திருத்துவது இந்த தம்பிக்கு சிறிதளவேனும் பிடிக்கவில்லை. தொடர்ச்சியாக அவன் தன்னை திருத்துவதை விரும்பாத தம்பி 'அண்ணன் உயிரோடு இல்லாமல் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். நான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பியதைச் செய்யலாமே. இவன் என்னை எப்போதும் திருத்திக்கொண்டிருக்கிறான். இவன் மரணமடைந்தால் நல்லது' என்று தனக்குள் சொல்ல ஆரம்பித்தான்.

சொற்ப காலம் சென்ற போது; என்னவோ தெரியவில்லை, அண்ணன் வியாதிப்பட்டு படுக்கையில் விழுந்தான். அவனுக்கு மருத்துவம் செய்தும் அது பலனளிக்காமல் சில நாட்கள் வைத்தியசாலையில் இருந்த அண்ணன் சடுதியாக மரணமடைந்தான். அண்ணன் இறந்தது தம்பிக்கு அதிர்ச்சியாக இருந்தாலும் ஒருவிதத்தில் நிம்மதி பெருமூச்சும்விட்டான். 'ஆகா... இனி என்னை கண்டிப்பதற்கு யாருமே இல்லை; நான் விரும்பியபடி வாழவேண்டியது தான், அண்ணன் இருந்தால் தன்னுடன் என்னை ஒப்பிட்டு எப்போதும் திருத்தம் சொல்லிக் கொண்டே இருப்பான். ஆனால் இனி என்னை கட்டுப்படுத்த யாருமே இல்லை' என்று தம்பி தன் மனம் போன போக்கில் வாழ ஆரம்பித்தான்.

அவன் பரீட்சையில் பெறும் பெறுபேறுகள், அவனுடைய நாளாந்த செயற்பாடுகள் குறித்து பெற்றோர் கூட அதிகம் கேட்பதில்லை. இவன் விளையாட்டாக ஏதாவது பொருளை திருடினால் கூட யாருமே இவனைக் கேட்பதற்கு இல்லை. இவனுக்கு அறிவுரை சொல்லிக் கொடுப்பதற்கும் யாரும் இல்லை. இப்படியே அவன் வளர்ந்து திருடனாய் மாறி சிறைக்குச் சென்று ஆயுள் தண்டனைக் கைதியாக மாற்றப்பட்டான்.

அவன் ஆயுள் தண்டனைக் கைதியாக சிறைச்சாலை அதிகாரியின் முன்னால் நின்ற போது அந்த சிறைச்சாலை அதிகாரி, 'உன்னைப் பார்த்தால் மிகவும் நாகரீகமுள்ள, படித்தவனைப் போன்று தெரிகிறது. ஏன் நீ திருடனாய் மாறினாய், உன் பெற்றோருக்கு நீ தான் ஒரே ஒரு பிள்ளை, என்ன நடந்தது? என்ன காரணம்?' என்று கேட்டான்.

அப்போது அந்த தம்பி அழுது கொண்டே 'என் அண்ணன் தான் காரணம்' என்றான். சிறைச்சாலை அதிகாரிக்கு ஒன்றுமே புரியவில்லை. 'என்ன நீ இப்படி மோசமான சூழ்நிலைக்கு சென்றதற்கு அண்ணன் தான் காரணமா? ஏன் உன் அண்ணன் தான் இதையெல்லாம் உனக்கு கற்றுக் கொடுத்தானா?' என்று கேட்டான்.


அதற்கு தம்பி சொன்னான்; 'இல்லை ஐயா, என் அண்ணன் இறந்து போனது தான் காரணம்' என்றான். சிறை அதிகாரி தொடர்ந்து அவனை விசாரிக்கும் போது தம்பி சொன்னான்; 'ஐயா என்னுடைய அண்ணன் என் சிறுவயதில் இருந்து என்னை எப்போதும் திருத்திக் கொண்டே இருப்பான். ஆனால் திடீரென அவன் வியாதிப்பட்டு இறந்து போனான். என் அண்ணன் இறந்த பிற்பாடு நான் மிகவும் சுதந்திரமாக செயற்பட ஆரம்பித்தேன். என்னை கண்டிப்பதற்கு ஆள் இல்லாததனால் என் மனம் போன போக்கில் சென்று இன்றைக்கு இவ்வளவு பெரிய குற்றவாளியாய் மாறி இந்த இடத்தில் வந்து நிற்கிறேன். ஆகவே நான் இந்த இடத்தில் வந்து நிற்பதற்கு என் அண்ணன் உயிரோடு இல்லாமல் இருந்தது தான் காரணம்' என்று சொன்னான்.

ஆம் நண்பர்களே, பார்த்தீர்களா கண்டிப்பு இல்லாமல் இருந்தால் இறுதியில் என்ன நிலைக்கு செல்ல வேண்டி இருக்கும் என்பதை. சிறுபிள்ளைகளை கண்டிப்பது மட்டுமல்ல ஒவ்வொரு மனிதனையும் ஏதோ ஒரு விதத்தில் கண்டித்து நடத்த வேண்டிய பொறுப்பு ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. தற்போது உலகம் சென்று கொண்டிருக்கும் சூழ்நிலையில் ஒருவரை ஒருவர் நேரில் சந்திக்க முடியாத சூழ்நிலை காணப்படுகிறது. இது சுதந்திரமான சூழ்நிலை என்று உங்கள் மனம் போகிற போக்கில் வாழாதீர்கள். ஏதோ ஒருவகையில் ஒருவருடைய கண்டிப்பிற்கு கீழ் வாழுங்கள் உங்கள் வாழ்க்கை பூந்தோட்டம் தான். **தீத்து 1:14 விசுவாசத்தினாலே ஆரோக்கியமுள்ளவர்களாயிருக்கும்படி, நீ அவர்களைக் கண்டிப்பாய்க் கடிந்துகொள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளை நிறைவேற்றும் தேவன்



❑ பர்னபா




கிறிஸ்துவுக்குள் அன்பின் அனல் வாசகர்களுக்கு வாழ்த்துக்களையும் சமாதானத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். தேவன் தாமே எங்கள் ஒவ்வொருவரையும் பாதுகாத்து, போஷித்து, உடுத்துவித்து விசேஷமாக பரவிவரும் பொல்லாத கொள்ளை நோய்களிலிருந்தும் பாதுகாத்து இவ் ஆண்டின் நடுப் பகுதி வரைக்கும் நடத்தி வந்தார். அவருக்கே சகல கனமும், மகிமையும், துதியும் உண்டாகட்டும். 'இஸ்ர வேலுக்குப் பனியைப் போலிருப்பேன்' என்று சொன்ன ஆண்டவர் அவ்வாறே எமக்கும் இருந்து நடத்துவார் – ஆமென்.

**எரேமியா 29:11 நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.**

அன்பான தேவ ஜனங்களே, சகோதர சகோதரிகளே இவ் வசனம் எதனைப் புலப்படுத்தி நிற்கிறதென்றால் சிறைப்பிடிக்கப்பட்டு, பாபிலோனுக்கு அடிமையாக கொண்டு செல்லப்பட்ட ஜனங்கள் சில காலங்கள் கழித்து தங்கள் குற்றங்களையும், பாவங்களையும் நினைத்து மனஸ்தாபப்பட்டு யெகோவா தேவனுக்கு எதிராக தாங்கள் செய்த எல்லா அக்கிரமங்களுக்காகவும் மனஸ்தாபப்பட்டு அழுது, தங்களை தேவனுக்கு நேராக திருப்பிக் கொண்டிருக்கும் நேரத்தில் அவர்களுக்குள்ளே ஓர் நினைவு அல்லது வேதனை எழும்புகின்றது. அது என்னவெனில், எப்போது மறுபடியும் எங்கள் சொந்த தேசத்திற்கு திரும்புவோம், வீடுகளை, வயல்களை, நிலங்களை, மதில் சூழ்ந்த பட்டணங்களை கட்டி வசதியாக வாழ்வோம். இடிந்த தேவாலயம், அதன் சுற்று மதில்கள் என இப்படி பாழாய்ப்போன தேசத்தை மறுபடியும் எப்போது கட்டியெழுப்புவோம் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது தான் தேவன் எரேமியா என்ற தம்முடைய உண்மையான தீர்க்கதரிசி மூலம் மேலே நாம் வாசித்த வசனத்தை தீர்க்கதரிசனமாக கூறுகின்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் பிரியமானவர்களே, தேவன் கூறியது போலவே **இஸ்ரவேல் ஜனங்களுடைய நினைவுகள் நிறைவேறியது.** எழுபது வருடங்கள் கழித்து அவர்கள் தங்கள் சொந்த தேசத்திற்குத் திரும்பவும், வீடுகளை கட்டி, வயல்களை விதைத்து தேவாலயத்தையும் அதன் மதில்களையும் கட்டுவதற்கு தேவன் அனுசாரியாக இருந்து உதவி செய்தார்.

நீங்களும் உங்களுடைய வாழ்க்கையிலே பிள்ளைகளைக் குறித்து பலவித நினைவுகளோடு இருப்பீர்கள். எனது பிள்ளைக்கு நல்ல வாழ்க்கை அமையாதா? வயது சென்று கொண்டிருக்கிறது, கையிலே பெருமளவு பணம் ஏதும் இல்லை. பெறுமதியானதாக எதுவும் இல்லை. எப்படி இந்த காரியங்கள் ஆகும் என நீங்கள் வேதனையோடு யோசித்துக் கொண்டிருக்கலாம்.

அதேபோன்று தீராத வியாதியினாலே வேதனைப்பட்டு தவிக்கிற ஜனமே, நான் எல்லோருக்கும் பாரமாக இருக்கிறேன், எப்போது எனக்கு சுகம் வரும், எப்போது நான் எழுந்து நடப்பேன், அல்லது சுகமாவேன் என்று இருதயத்திற்குள் போராடிக் கொண்டிருக்கும் மகனே, மகளே!

கடன்பிரச்சினையினாலே வெளியே முகம் காண்பிக்க முடியாமலும், கடனை தீர்ப்பதற்கு போதிய நிர்வாகம் இல்லாதமையாலும் ஏங்கி உருக்குலைந்து கொண்டிருக்கும் மனிதர்களே, எப்போது என்னுடைய கடன்களையெல்லாம் செலுத்தி முடிப்பேன், யார் எனக்கு உதவி செய்வார்கள் என்று நினைத்து அங்கலாய்க்கும் சகோதரனே,

அவ்வாறே திருமணமாகி நீண்ட வருடங்களாக குழந்தைகள் இல்லாமல் தவிக்கும் சகோதரியே, சூழ இருக்கும் மனிதர்களால்மனமுடையப்பட்டு வேதனையோடு இருப்பவர்களே...!

உங்களுக்கொரு நற்செய்தி.. நீங்கள் ஏதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்கிறார். அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்திற்கேதுவான நினைவுகளே.

எனவே அன்பானவர்களே, நீங்கள் ஒன்றையும் குறித்து யோசித்து தொடர்ந்து புலம்ப வேண்டாம். உங்களுக்கு வேண்டியதை உங்கள் இருதயம் விரும்பிய படியே தேவன் செய்து முடிப்பார்.

**11இராஜாக்கள் 4:1-7 (1.)**

**தீர்க்கதரிசிகளுடைய புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாயிருந்த ஒரு ஸ்திரீ எலிசாவைப் பார்த்து: உமது அடியானாகிய என் புருஷன் இறந்து போனான்; உமது அடியான் கர்த்தருக்குப் பயந்து நடந்தான் என்பதை அறிவீர்; கடன்கொடுத்தவன் இப்போது என் இரண்டு குமாரரையும் தனக்கு அடிமைகளாக்கிக்கொள்ள வந்தான் என்றாள். 2. எலிசா அவளை நோக்கி: நான் உனக்கு என்னசெய்யவேண்டும்? வீட்டில் உன்னிடத்தில் என்ன இருக்கிறது சொல் என்றான். அதற்கு அவள்: ஒரு குடம் எண்ணெய் அல்லாமல் உமது அடியாளுடைய வீட்டில் வேறொன்றும் இல்லை என்றாள். 3. அப்பொழுது அவன்: நீ போய், உன்னுடைய அயல்வீட்டுக்காரர் எல்லாரிடத்திலும் அநேகம் வெறும் பாத்திரங்களைக் கேட்டுவாங்கி, 4. உள்ளே போய், உன் பிள்ளைகளுடன் உள்ளே நின்று கதவைப் பூட்டி, அந்தப் பாத்திரங்கள் எல்லாவற்றிலும் வார்த்து, நிறைந்ததை ஒரு பக்கத்தில் வை என்றான். 5. அவள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனிடத்திலிருந்து போய், தன் பிள்ளைகளுடன் கதவைப்பூட்டிக்கொண்டு, இவர்கள் பாத்திரங்களை அவளிடத்தில் கொடுக்க, அவள் அவைகளில் வார்த்தாள். 6. அந்தப் பாத்திரங்கள் நிறைந்தபின், அவள் தன் மகன் ஒருவனை நோக்கி: இன்னும் ஒரு பாத்திரம் கொண்டுவா என்றாள். அதற்கு அவன்: வேறே பாத்திரம் இல்லை என்றான்; அப்பொழுது எண்ணெய் நின்றுபோயிற்று. 7. அவள் போய் தேவனுடைய மனுஷனுக்கு அதை அறிவித்தாள். அப்பொழுது அவன்: நீ போய் அந்த எண்ணெயை விற்று, உன் கடனைத் தீர்த்து, மீந்ததைக்கொண்டு நீயும் உன் பிள்ளைகளும் ஜீவனம்பண்ணுங்கள் என்றான்.

தீர்க்கதரிசி ஒருவன் கடனோடு மரித்துவிட்டான். கடன் கொடுத்தவர்கள் அவனுடைய மனைவியையும் பிள்ளைகளையும் நெருக்கிக் கொண்டிருக்கும் போது அவனுடைய மனைவி எலிசா என்ற தீர்க்கதரிசியை நோக்கி ஓடுகிறாள். பிற்பாடு என்ன நடைபெற்றது. கடனைக் கட்டி முடிக்கக்கூடிய அளவிற்கு மாத்திரமல்ல அவள் தொடர்ந்து ஜீவனம் பண்ணக்கூடிய அளவிற்கு தேவன் அற்புதம் செய்தார். எண்ணெய் பெருகியது, அதனை விற்பனை செய்தாள். கடனை அடைத்தாள். வளமாக வாழ்ந்தாள்.

அதே போன்று, அன்னாள் என்ற பெண்மணியும் பிள்ளையில்லாமல் மலடியாக இருந்த நேரத்தில் வேதனை நோக்கி மனங்கசந்து ஒரு பிள்ளை வேண்டுமென அழுது ஜெபித்தாள். **1சாமுவேல் 1:11 சேனைகளின் கர்த்தாவே, தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப் பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைந்தருளி, உமது அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்; அவன் தலையின் மேல் சவரகன் கத்தி படுவதில்லை என்று ஒரு பொருத்தனை பண்ணினாள்.** ஆனால் தேவன் அவள் நினைத்ததிலும், கேட்டதிலும் அதிகமாகவே செய்தார். மேலும்ஐந்துபிள்ளைகளைப்பெற்றெடுத்தாள்.

மத்தேயு 15:22-28 (22.) **அப்பொழுது, அந்தத் திசைகளில் குடியிருக்கிற கானானிய ஸ்திரீ ஒருத்தி அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும், என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள் என்று சொல்லிக் கூப்பிட்டாள். 23. அவளுக்குப் பிரதியுத்தரமாக அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அப்பொழுது அவருடைய சீஷர்கள் வந்து: இவள் நம்மைப் பின் தொடர்ந்து கூப்பிடுகிறாளே, இவளை அனுப்பிவிடும் என்று அவரை வேண்டிக் கொண்டார்கள். 24. அதற்கு அவர்: காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல வென்றார். 25. அவள் வந்து: ஆண்டவரே, எனக்கு உதவிசெய்யும் என்று அவரைப் பணிந்து கொண்டாள். 26. அவர் அவளை நோக்கி: பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார். 27. அதற்கு அவள்: மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள். 28. இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்.**

கானானிய ஸ்திரீ ஒருத்தி தன் மகளுக்காக இயேசுவிடம் மன்றாடுகிறாள். கொடிய வியாதி மாத்திரமல்ல பிசாசின் தாக்கம் ஒரு புறம். பிள்ளை துடிக்கிறது. இயேசுவிடம் வந்த இந்த தாயும் மனமுடையும்படியான சம்பவமும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுக்களும் நடக்கிறது. ஆனாலும் எல்லாவற்றிலும் தன்னை தாழ்த்திய வளாய் இயேசு கிறிஸ்துவுக்கு முன் நின்ற போது இயேசு சொன்னார், 'நீ விரும்பிய படி உனக்கு ஆகக்கடவது' என்றார்.

ஆம் பிரியமானவர்களே, **'உங்களைத் தாழ்த்தி தேவன் பக்கம் சிறுமைப்படுத்தும் போது உங்களுக்கான அற்புதங்கள் பெரியதாக மாறும்'.**

எனவே எனக்கு அன்பான வர்களே இந்த ஆண்டின் இறுதிப்பகுதி யிலே உங்கள் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ற பலனை தேவன் தருவார். விசுவாசத் தோடு தேவனை அண்டிக் கொள்ளுங்கள். தளர்ந்துவிடவேண்டாம். தேவன் உங்கள் மேல் நன்மையான நினைவு வைத்திருக் கிறார், நிச்சயமாக நிறைவேற்றுவார்.

## வினா விடை - 105

01. ஓர் மலையில் மரித்த ஆரோனுக்காகத் துக்கம் கொண்டாடின நாட்கள் எத்தனை?
02. ஆபிரகாம் மரித்த போது அவனை அடக்கம் பண்ணினவர்கள் யார்? யார்?
03. 'இதோ, இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத் தவிரப் பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன்' என்ற புருஷன் யார்?
04. கர்த்தர் தங்களை இரட்சித்த செய்தியை தன் மாமனுக்கு விவரித்துச் சொன்ன மருமகன் யார்?
05. எருசலேமின் இரண்டாம் வகுப்பில் குடியிருந்தவள் யார்?
06. 'சன்மார்க்கனையும், துன்மார்க்கனையும் தேவன் நியாயந்தீர்ப்பார்' என்றது யார்?
07. தன் மைத்துனனை முகங்குப்புற விழுந்து வணங்கினவன் யார்?
08. 'நீர் தேவனுடைய மனுஷன் என்றும், உம்முடைய வாயிலிருந்து பிறக்கும் கர்த்தரின் வார்த்தை உண்மை என்றும் இப்போது அறிந்திருக்கிறேன்' என்ற ஸ்திரீ யார்?
09. 'நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்' என்றவர் யார்?
10. தங்கள் புருஷனுக்கு முன் முகங்குப்புற விழுந்து வணங்கின பெண்கள் யார்? யார்?

## குறுக்கெழுத்துப் போட்டி - 102
### சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. அபிகாயில் – 11சாமு 3:3
03. ஒர்மா – நியா 1:17
07. மேட்டிமை – உபாக 8:13-14
10. கீகோன் – 1இராஜா 1:45
12. லேயாள் – ஆதியா 49:31
16. நேபுகாத்நேச்சார் – தானி 4:18

**வலமிருந்து இடமாக**

02. கோசேன் – யாத் 8:22
04. இக்கபோத் – 1சாமு 4:21
06. சாலொமோன் – 11நாளா 8:6
08. கானானியர் – சகரியா 14:2
14. தேமா – 11தீமோத் 4:10

**மேலிருந்து கீழாக**

01. அத்தாலியாள் – 11இரா 11:14
05. போவாஸ் – ரூத் 4:11
09. ஏத்தேர் – 1இராஜா 2:5
10. கீலேயாத் – 1நாளா 6:80

**கீழிருந்து மேலாக**

11. நெகேமியா – நெகே 2:10
13. மொர்தெகாய் – எஸ்தர் 2:10
15. சீரிய – எஸ்றா 4:7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போதகர் வை.தேவதாஸ்




எனக்கு அருமையான வாலிப சகோதர, சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது!

அன்பு சகோதரனே! ஏதோ ஒரு மன விரக்தியோடும், சலிப்பான உணர்வோடும் எதேச்சையாக அனல் புத்தகத்தை எடுத்து நீங்கள் வாசிப்பதை உங்கள் ஆண்டவர் அறிவார். கலங்காதே மகனே, சோர்ந்து போகாதே! திடன் கொள்! உனக்காக தன் ஜீவனையே கொடுத்த இயேசு உன்னைக் கைவிடமாட்டார்.

அன்பின் தேவ ஜனங்களே இந்த நாட்களில் ஓர் தனிமை உணர்வு உங்களை ஆட்கொள்கிறதா? எல்லாமே முடிந்துவிட்டநிலை போன்று காணப்படுகிறதா? யாருமே உதவிக்கரம் நீட்டவில்லையா? ஏன், கடவுளே என்னை கைவிட்டுவிட்டார் என உங்கள் உள்மனம் சொல்கிறதா?

இரக்கமுள்ள தேவன் சொல்லும் வசனங்களைக் கவனியுங்கள். **ஏசாயா 54:7-8 (7.) இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன்; ஆனாலும் உருக்கமான இரக்கங்களால் உன்னைச் சேர்த்துக்கொள்வேன். 8. அற்பகாலம் மூண்ட கோபத்தினால் என் முகத்தை இமைப்பொழுது உனக்கு மறைத்தேன்; ஆனாலும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன் என்று கர்த்தராகிய உன் மீட்பர் சொல்லுகிறார்.**

கர்த்தர் என்னைக் கைவிட்டுவிட்டார், மறந்துவிட்டார் என்று கலங்கவோ, புலம்பவோ வேண்டாம். **சிலவேளைகளில் இமைப்பொழுது கைவிட்டது போன்று தோன்றலாம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆனால் உண்மை என்னவெனில் உருக்கமான இரக்கங்களால் கர்த்தர் நம்மை இழுத்துக்கொள்வார் என்பதே சத்தியம் ஆகும்.**

பிரியமானவர்களே, தேவன் நம்மை விட்டுவிலகுவதுமில்லை; நம்மை ஒருபோதும் கைவிடுவதும் இல்லை. இதனை நீங்கள் ஒரு பொழுதும் மறக்க வேண்டாம். இதனை நீங்கள் மறக்கும் பொழுதுதான் வீணான அச்சங்களும், குழப்பங்களும் உங்களைச் சூழ்ந்து கொள்கிறது.

என்றுமே இல்லாதவாறு தற்போதைய நாட்களில் மனிதர்களை தனிமை உணர்வானது மிகவும் ஆக்கிரமித்துள்ளது. உன்னை நேசிக்க யாருமே இல்லை, உன்னை யாருமே கவனிக்கமாட்டார்கள், நீ ஓர் தனிப்பிறவி. இப்படியான பல பொய்களை பிசாசு மனிதர்களுக்குள் விதைக்கின்றான்.

ஆனால் உண்மை என்னவென்றால் **தேவன் உன்னோடு கூட இருக்கிறார். அவர் உன்னை நேசிக்கிறார்.** ஆகவே தேவ பிள்ளையே நீ நிம்மதியோடு வாழ முடியும். **ஆம் கர்த்தர் உன்னைக் கைவிடவேமாட்டார்.**

கடந்த சஞ்சிகைகளில் சிம்சோன் தனது வாழ்வில் பெற்ற ஜெயங்கள், அவர் கொண்டிருந்த நற்பண்புகள் குறித்து ஆராய்ந்தோம். இவைகளையெல்லாம் நீங்கள் வாசித்தீர்களா? உங்கள் வாழ்க்கையில் இச் சத்தியங்கள் எத்தகைய மாற்றங்களைக் கொண்டு வந்தது? வாலிபர் பகுதியில் பிரசுரிக்கப்படும் இச் செய்திகள் உங்களுக்கு பயனுள்ளதாக காணப்படுகிறதா? அல்லது வெறும் எழுத்துக்களாகத்தான் காணப்படுகிறதா? **தயவு செய்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் தயங்காமல் தெரியப்படுத்துங்கள். தேவ தயவு உங்களோடு இருப்பதாக.**

இனிவரப்போகும் சத்தியங்களில் சிம்சோனின் தீய குணங்கள், தோல்விகள், பெலவீனங்கள் குறித்து சிறிது விபரமாக பார்க்கவுள்ளோம். இவைகளை அறிந்து கொள்வதற்கு தேவன் தாமே நமக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைத் தந்தருள்வாராக.

சிம்சோன் எனும் பெயருக்கு **'சூரியனைப் போன்றவர்'** எனும் அர்த்தம் கொடுக்கப்பட்டிருப்பது நம் அனைவருக்கும் தெரியும். எழும்பிப் பிரகாசிக்கும் வாழ்வுக்கு அழைக்கப்பட்ட ஒருவரே சிம்சோன். மாத்திரமல்லாமல் அவரது பிறப்பு அற்புதமானது. அவரது வாழ்வில் அவ்வப்பொழுது வெளிப்பட்ட தேவ வல்லமை அதிசயமானது. அவரும் பல சாதனைகளைப்படைத்தார். அவைகளையெல்லாம் கடந்த இதழ்களில் கவனித்தோம்.

இப்பொழுதோ **தேவ சமூகத்தில் வாழ வேண்டிய சிம்சோன் பாவத்தில் விழுந்து கிடந்த** துயர வரலாற்றைப் பார்க்கப்போகின்றோம்.

**தேவ ஆவியானவரால் தூண்டப்பட வேண்டிய சிம்சோன் பிசாசின் அரவணைப்புக்குள் சிக்குண்டு கிடக்கும்** வேதனையை தியானிக்கப்போகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விழுந்தாலும் எழுந்திருக்க வேண்டிய சிம்சோன் தொடர்ந்தும் பாவ சகதிக்குள் இழுக்கப்படும் அவமானங்களை வாசிக்கப்போகின்றோம்.**

**சீறிவந்த சிங்கத்தைக் கொன்ற சிம்சோன் தனக்குள் எகிறிவந்த இச்சையைக் கொல்ல முடியாமல்** சீரழிந்த கதையைப் பார்க்கப்போகின்றோம்.

வாருங்கள் தொடர் வேதப்பாடத்திற்குள் நுழைவோம்.

## 01. பெண்ணாசையின் மயக்கம் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தார்.

**நியாயாதிபதிகள் 14:1 சிம்சோன் திம்னாத்துக்குப் போய், திம்னாத்திலே பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒரு பெண்ணைக் கண்டு. நியாயாதிபதிகள் 16:1, 4 (1.) பின்பு சிம்சோன் காசாவுக்குப் போய், அங்கே ஒரு வேசியைக் கண்டு, அவளிடத்தில் போனான். 4. அதற்குப்பின்பு அவன் சோரேக் ஆற்றங்கரையில் இருக்கிற தெலீலாள் என்னும் பேருள்ள ஒருஸ்திரீயோடே சிநேகமாயிருந்தான்.**

எனது ஊழிய ஆரம்ப நாட்களில் வேதாகம பாடங்களை கற்றுத் தந்த போதகர் ஓர் குறிப்பிட்ட வேதாக பாடதத்தை கற்றுத் தரும் பொழுது ஊழியர்கள் குறிப்பாக 3Gக்கு மிக அவதானமாக இருக்க வேண்டும் எனவும், இந்த 3Gஇல் ஏதாவது ஒரு Gஇல் பிசாசு ஊழியர்களை விழுத்த முயற்சிப்பான் எனவும் கற்றுத் தந்தது இன்னும் நினைவில் இருக்கிறது. சரி அந்த 3Gம் என்ன?

**முதலாவது G – Girl – பெண்**

**இரண்டாவது G – Gold – பொன்**

**மூன்றாவது G – Glory – மகிமை**

இதனையே மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசையாலே
உன் ஆசை உலக வாழ்க்கை முடியும் – தன்னாலே.
உன் பாவம் உன்னைத் தொடர்ந்து பிடிக்கும் தன்னாலே

என்று பழைய பாடல் ஒன்றில் தேவ மனிதர் ஒருவர் பாடியுள்ளார்.

ஆம் அருமையானவர்களே, இந்த மூன்று கண்ணிகளும் இன்றும் பிசாசின் ஆயுதமாகவே இருக்கின்றது. **மண் ஆசை, பொன் ஆசை, பெண் ஆசை** என்ற மூன்று ஆசைகளில் ஏதாவது ஓர் ஆசைக்குள் நீங்கள் சிக்கியிருந்தால் இன்றே ஆவியானவரின் துணையோடு வெளியே வாருங்கள். இல்லையெனில் உங்கள் முடிவு பரிதாபமே.

பெண் ஆசை என்ற வலைக்குள் சிம்சோன் சிக்குண்டு அழிந்து போய்விட்டார்.

ஓர் மனிதனின் வாழ்க்கையானது ஆசையிலும், நம்பிக்கையிலுமே கடந்து செல்கின்றது. ஆசையே ஓர் மனிதனை எல்லாத்துன்பங்களுக்குள்ளும் அழைத்துச் செல்கிறது. **இன்னும் வேண்டும் என்கிற மனமேயல்லாமல், போதும் என்கிற மனதை காணமுடியவில்லை.**

**1தீமோத்தேயு 6:6 போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்.** என வேதம் சொல்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணாசை கொண்ட மனிதன் ஓர் மிகப்பெரிய பிரச்சினையில் சிக்க வேண்டிய நிலை வரும் பொழுது அவனுக்கு உதவி செய்ய யாருமே முன்வர மாட்டார்கள். பெண்ணாசையில் சிக்குண்ட மனிதன் சமூதாயத்தில் எவ்வளவு நற்பெயரைப் பெற்றிருந்தாலும் நொடிப்பொழுதே எல்லாவற்றையும் இழந்து விடுகின்றான்.

ஒரு மரணமானது கல் நெஞ்சம் கொண்டோரையும் ஒரு கணம் கதி கலங்க வைக்கும். ஆனால் பெண் பிரச்சினையால் மரிக்கும் ஒருவரது மரணத்திற்கு முகம் சுழிப்பவர்களே அதிகம்.

திருமணத்திற்கு அப்பால் தன் கணவனுக்கு துரோகம் செய்யும் மனைவிகளும்; தன் மனைவிக்கு துரோகம் செய்யும் கணவர்களும் தற்காலத்தில் மிகவும் பெருகியுள்ளனர். எவ்வளவுக்கு ஆசை மயக்கத்தால் பாவம் செய்கின் றார்களோ அவ்வளவுக்கு பாவத்தின் வேதனையையும் அனுபவிக்கின்றனர்.

இவ் வேத பாடத்தை எழுதும் இந் நாளில் வானொலியில் ஒரு செய்தியைக் கேட்டேன். அதாவது நமது தேசத்தில் உள்ள ஓர் கணவன் தனது மனைவியையும் இரண்டு பிள்ளைகளையும் இலங்கையில் விட்டு உழைப்பின் நிமித்தம் மத்திய கிழக்கு நாடு ஒன்றில் பணிபுரியச் சென்று நான்கு வருடங்கள் ஆகின்றது. இந் நிலையில் அவரது 35வயதான மனைவி கள்ள உறவின் மூலம் கர்ப்பம் தரித்து சிசுவைப் பிரசவித்தது மட்டுமல்லாமல் அச் சிசுவை கொலையும் செய்துள்ளார். பொலிசார் அவரை கைது செய்துள்ளனர்.

பாருங்கள் பாவ ஆசையானது தனது இரு பிள்ளைகளையும் மறக்கச் செய்தது. அத்தோடு தனக்காக சிரமப்பட்டு உழைக்கும் கணவனை தலைகுனிய வைத்துள்ளது. திருமணமானவர்கள் தேவன் தங்களுக்குத் தந்த துணையைவிட மற்ற எவரிடமும் உறவு கொள்வது கொடிய பாவச் செயலும் துரோகமும் ஆகும். தவறான உறவுகளினால் ஏற்படும் பாவமானது முதலாவது மனச்சாட்சியை வாதிக்கின்றது. பிற்பாடு அது அவரது வாழ்வையே சீரழிக்கின்றது.

தேவன் நம்மை உருவாக்கும் பொழுது உணர்வற்ற வெறும் ஜடங்களாகப் படைக்கவில்லை. மாறாக உள்ளத்திலும் உடலிலும் உணர்ச்சிகள் பொங்குமாறுதான் படைக்கப்பட்டுள்ளோம். எனவே இவ் உணர்ச்சிகளை சரியாகவோ, பிழையாகவோ பயன்படுத்தும் உரிமை எமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. எனவே பாலியல் உணர்ச்சிகளை பிழையாக பயன்படுத்தாமல் சரியாகப் பயன்படுத்தும் பொழுது வாழ்க்கை இனிதாக இருக்கும்.

பாலியல் உணர்வுகளை சரியானபடி நிறைவு செய்வதற்காகவே தேவன் குடும்பம் எனும் பந்தத்தை அதாவது திருமணத்தை ஏற்படுத்தியுள்ளார். எனவே தேவன் ஏற்படுத்திய இம் முறைமைக்குள் இருக்கும் பொழுது ஒரு பிரச்சினையும் ஏற்படாது. மாறாக சாத்தானின் தூண்டுதலிற்கு அடிபணிந்து குறுக்கு வழியால் செல்லும் போது பலவித துன்பங்களையும் அனுபவிக்க வேண்டி வரும்.

எனக்கு அருமையான வாலிப சகோதரனே! சகோதரியே! காதல் என்ற போர்வையில் காமத்தை அடிப்படையாகக் கொண்ட அனேக உறவுகள் இக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் பெருகியுள்ளன. காதலுக்கும் காம இச்சைக்கும் உள்ள வேறுபாட்டை சுருக்கமாக கூறவிரும்புகின்றேன்.

திருமணத்திற்கு முன் நீங்கள் காதல் செய்யும் நபர் உங்களுடன் உடலுறவு கொள்ள விரும்புவாராயின் அது காதல் அல்ல, மாறாக அது காமமே.

மோக உணர்ச்சியின் கொந்தளிப்பே திருமணத்திற்கு முன்பதான உடலுறவின் ஏக்கமாகும். எனவே காதல், காதல் என்று இப்படியான காரியங்களில் ஏமாந்து போய்விடவேண்டாம்.

சகோதர சகோதரிகளே காதலுக்கும் மோகத்திற்கும் உள்ள வித்தியாசத்தை 11சாமுவேல் 13:1-19இல் மிகத் தெளிவாகக் காணமுடியும். இதனை வாசிக்கின்ற வாலிபர்களே தயவு செய்து இப்பொழுதே வேதாகமத்தை எடுத்து இப் பகுதியை தியானிக்கும் படி கேட்டுக்கொள்கின்றேன்.

**11சாமுவேல் 13:1-2 (1.) இதற்குப்பின்பு தாவீதின் குமாரனாகிய அப்சலோமுக்குத் தாமார் என்னும் பேருள்ள சவுந்தரியமுள்ள ஒரு சகோதரி இருந்தாள்; அவள் மேல் தாவீதின் குமாரன் அம்னோன் மோகங்கொண்டான். 2. தன் சகோதரியாகிய தாமாரின் நிமித்தம் ஏக்கங்கொண்டு வியாதிப்பட்டான்; அவள் கன்னியாஸ் திரீயாயிருந்தாள்; அவளுக்குப் பொல்லாப்புச் செய்ய, அம்னோனுக்கு வருத்தமாய்க் கண்டது.**

மோக உணர்வானது உடனடியான இன்பத்தை தேடும். ஆனால் காதல் காத்திருக்கும்.

காம உணர்வு தன் ஆசையை எப்படியாவது நிறைவேற்றத் துடிக்கும். ஆனால் உண்மை காதலோ அடுத்தவரின் சந்தோஷத்தை தேடும்.

மோகம் முரட்டத்துனமாகச் செயற்படும். அன்போ விட்டுக்கொடுப்புடன் பெருந்தன்மையாக நடக்கும்.

மோக உணர்ச்சி மிகக் கொடுமையானது. காமம் தொடக்கத்தில் அன்பு போலத்தான் தொடங்கும். ஆனால் அதன் வலியை சீக்கிரம் அனுபவிக்க நேரும்.

**11சாமுவேல் 13:14 அவன் அவள் சொல்லைக் கேட்கமாட்டேன் என்று அவளைப் பலவந்தமாய்ப் பிடித்து, அவளோடே சயனித்து, அவளைக் கற்பழித்தான்.**

குறிப்பாக சாகோதரர்களே! வாழ வேண்டியவர்களின் கற்புக்களை சீரழிக்காதீர்கள். பலவந்தப்படுத்தி, பயமுறுத்தி பாவத்திற்கு அடிபணிய வைக்க வேண்டாம். தொழில்நுட்பங்கள் பெருகியுள்ள இக் காலத்தில் சில படங்களை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு பயமுறுத்தி, பாவ செயல்களில் ஈடுபடவேண்டாம். அப்படியான பாவங்களில் ஈடுபடுபவர்கள் உங்கள் நண்பர்களாக இருப்பார் களானால் தயவு செய்து அவ் நட்புவட்டாரத்தைவிட்டு வெளியே வாருங்கள்.

**11சாமுவேல் 13:15 பிற்பாடு அம்னோன் அவளை மிகவும் வெறுத்தான்; அவன் அவளை விரும்பின விருப்பத்தைப் பார்க்கிலும், அவளை வெறுத்த வெறுப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதிகமாயிருந்தது. ஆகையால்: நீ எழுந்து போய்விடு என்று அம்னோன் அவளோடே சொன்னான்.**

அம்னோனின் செய்கைகளைப் பார்த்தீர்களா? ஆரம்பத்தில் தாமாருக்காக உயிரையே கொடுப்பவன் போல் அவள் நினைவிலேயே வாழ்ந்தான். மாத்திரமல்லாமல் அவள் எப்பொழுது தனக்கு கிடைப்பாள்; எப்பொழுது அவளை அனுபவிக்கலாம் என்ற ஏக்கத்தினால் அவனுக்கு ஏக்க வியாதியே பிடித்தது.

இன்றும் பல இளைஞர்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த முடியாமல் ஏக்க வியாதியுள்ளவர்களாக அலைகிறார்கள். தங்கள் காம இச்சைகளை நிறைவேற்றுவதற்காக காதல் என்ற போர்வையில் திருமணமாகாமலே ஒருவரையொருவர் அனுபவிக்கின்றார்கள். அது தான் நாகரீகம் என்று ஒப்பாரியும் வைக்கிறார்கள். *Boy Friend or Girl Friend* இல்லாதவன் நாகரீகமற்றவன் என்ற நிலைக்கு அவனையோ அல்லது அவளையோ தள்ளிவிடுகின்றார்கள்.

நாங்கள் நன்றாக படித்தவர்கள், நாங்கள் நல்ல வேலையில் இருக்கிறோம், எங்களுக்கு வங்கியில் அதிக பணம் வைப்பிலிருக்கிறது, நாங்கள் நகரத்தில் வசிக்கிறோம் என்ற மமதையில் பலர் செய்யும் காரியங்கள் அருவருப்பிலும் அருவருப்பானது. மோக இச்சைகளை கட்டுப்படுத்த முடியாமல் பல நவீன வழிகளை கண்டுபிடித்து அதற்கு நாகரீகம் *Fashion* என்ற மேற்சாயத்தைப் பூசுகின்றார்கள்.

ஓர் வாலிப சகோதரி இப்படிச் சொன்னாராம், எந்த ஒரு ஆணைப் பார்த்தாலும் அவனோடு விபச்சாரம் செய்ய வேண்டும் என்ற ஆசை என்னை மேற்கொள்கின்றது.

ஓர் சகோதரன் சொன்னாராம், அழகிய பொம்மைகள் என் காம உணர்ச்சி களைத் தூண்டி அப் பொம்மைகளுடன் உறவு கொள்ள என்னை தூண்டுகின்றது.

இப்படி அனேக உதாரணங்களை சொல்லிக் கொண்டே செல்ல முடியும். பிரியமானவர்களே, நாம் கடைசிக் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வஞ்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாக இருப்போமாக.

**11சாமுவேல் 13:15a பிற்பாடு அம்னோன் அவளை மிகவும் வெறுத்தான்.**

**மோகம் வெறுப்பாக மாறியது.** இதில் இருந்து புரிகின்றதா மோகத்தின் காலவதி நாட்கள். ஆம் சகோதர சகோதரிகளே எந்தளவிற்கு 'நீ தான் எனக்கு வேண்டும்' என்று சொல்கின்றார்களோ அந்தளவிற்கு உங்களை அனுபவித்த பிற்பாடு 'வெறுத்துவிடுவார்கள்'. ஏமாந்து போகவேண்டாம்.

**11சாமுவேல் 13:15b அவன் அவளை விரும்பின விருப்பத்தைப் பார்க்கிலும், அவளை வெறுத்த வெறுப்பு அதிகமாயிருந்தது.**

**மோக இச்சை ஒரு போதும் திருப்தியளிக்காது. உண்மையான அன்பே திருப்தியைக் கொடுக்கும்.** பாருங்கள் எவ்வளவிற்கு தாமாரை விரும்பினானோ அவ்வளவிற்கு அவளை வெறுத்தான் என்று எழுதப்பட்டுள்ளது. என்ன காரணம்? அவன் அடைய வேண்டியதை அடைந்துவிட்டான். அவன் அவளை அன்பினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையவில்லை. மாறாக மோகத்தினால் அடைந்தான். ஆகையினால் அவளை வெறுத்தான்.

நீங்களே சிந்தித்துப் பாருங்கள். உங்களை சூழ நடப்பவற்றை கவனித்துப் பாருங்கள்.

காதலனால் வெறுக்கப்பட்ட காதலி
காதலியால் வெறுக்கப்பட்ட காதலன்
கணவனால் வெறுக்கப்பட்ட மனைவி
மனைவியால் வெறுக்கப்பட்ட கணவன்

இப்படி எத்தனை... எத்தனை... இவை அனைத்திற்கும் அடித்தளம் என்ன? உண்மை அன்பிற்கு பதிலாக கவர்ச்சிகளும், காமங்களுமே அவர்களை ஆட்கொண்டுள்ளது.

**11சாமுவேல் 13:15C ஆகையால்: நீ எழுந்து போய்விடு.**

மிகப்பெரிய பாவத்தை அம்னோன் செய்தான். அவளை கற்பழித்த பாவத்தை மட்டுமல்லாது அவளை வெறுத்து வெளியே ஒதுக்கும் நிலைக்கு அம்னோன் சென்றான்.

பிரியமானவர்களே, **தேவன் உறவு முறிவுகளை விரும்புகிறவர் அல்ல; மாறாக அவர் இணைந்து செல்வதையே விரும்புகிறார்.** உங்களை நம்பி, உங்களிடம் கொடுக்கப்பட்டுள்ள காதலனையோ, மனைவியையோ வெளியே அனுப்ப வேண்டாம். இதனை வாசிக்கின்ற நீங்கள் ஒரு வேளை குடும்பஸ்தராக இருந்தால் உங்களுக்கும் ஓர் ஆலோசனையை பதிவிடுகின்றேன். **எப்படி பிரிவது என்று சிந்திக்காமல் எப்படி சேர்ந்து வாழ்வது என்று முயற்சி எடுங்கள்.**

தேவனால் முன் தெரிவு செய்யப்பட்ட சிம்சோன் தேவன் தன் மேல் வைத்திருந்த அனைத்து திட்டங்களையும் மறந்தவனாய் பெண்கள் பின்பதாக அலைவதையே வாடிக்கையாகக் கொண்டார். பெண் ஆசை என்ற மாய வலைக்குள் சிக்குண்ட சிம்சோன் தூண்டிலில் சிக்கிய மீனைப் போலானார். எத்தனையோ சந்தர்ப்பங்களை தேவன் அவருக்கு கொடுத்தும் அவர் வெளியே வர முயற்சி எடுக்கவில்லை.

**இதனை வாசிக்கிற அன்பு மகனே, மகளே! சகோதரனே, சகோதரியே! இந்த அனல் சஞ்சிகையின் மூலம் தேவன் உங்களுக்கும் ஓர் சந்தர்ப்பத்தை தருகின்றார். பெண் ஆசை என்ற பாவக்கட்டில் இருந்து வெளியே வாருங்கள்.**

உங்களுக்காக கல்வாரி சிலுவையில் இரத்தம் சிந்தி ஜீவனைக் கொடுத்த இயேசு கிறிஸ்து உங்களுக்காக பெரிதான திட்டத்தை மாத்திரமல்ல, ஆசீர்வாதமான வாழ்க்கையையும் வைத்திருக்கிறார். காலமெல்லாம் நிம்மதியாக வாழ சர்வ வல்லமையுள்ள தேவன் உங்களுக்கு உதவி செய்வார்.

மறு இதழில் சந்திக்கும் வரை தேவ கிருபை உங்களோடு கூட இருப்பதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எச்சரிப்பு




திருமதி. J.பிலிப்

பூந்தோட்டத்தில் பிரியமுள்ள ஒரு சகோதரி தனக்கு விரும்பிய சில பூ மரங்களை வாங்க ஒரு பூந்தோட்டத்திற்குச் சென்றாள். அங்கே ஒரு அழகான பூமரத்தை கண்டு அதை வாங்கும்படி தோட்டக்காரனிடத்தில் விசாரித்தாள். அது காடுகளில் வளரும் ஒரு பூ மரம். அதை மிகவும் கவனமாக பராமரிக்க வேண்டும். அப் பூ மரத்திற்கு என்ன காரியங்கள் செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது என்பதைக் குறித்து சில எச்சரிப்புக்களையும் அந்த சகோதரியிடத்தில் தோட்டக்காரன் சொன்னார். எல்லாவற்றையும் கேட்டபின் சகோதரி அப் பூ மரத்திற்குரிய பணத்தைக் கொடுத்து பூ மரத்தை வாங்கி தன்னுடைய வீட்டுத்தோட்டத்தில் நாட்டினாள்.

ஆனால் அவள் விட்ட பெரிய தவறு என்ன தெரியுமா? தோட்டக்காரன் கூறிய எச்சரிப்பின்படி அப் பூ மரத்தை அவள் பராமரிக்கவில்லை. சில நாட்களின் பின் கவனித்தால் அப் பூ மரம் வாடத்தொடங்கி விட்டது. என்ன செய்யலாம் என்று யோசித்த சகோதரி தன் நண்பியும் அப் பூ மரத்தை வாங்கி வளர்க்கின்றாள் என்ற எண்ணம் வந்தவுடன், நண்பியின் வீட்டிற்கு சென்றாள், அதைப் பார்த்தாள், திகைத்தாள், ஆச்சரியப்பட்டாள். காரணம் அப் பூ மரம் மிகவும் அழகாக பூக்கள் பூத்திருந்தது. அதன் காரணத்தை அறிய முற்பட்டாள். காரணத்தை அறிந்தவுடன் தன்னுடைய தவறை உணர்ந்து கொண்டாள். காரணம் என்ன தெரியுமா? அப் பூ மரத்தை தோட்டக்காரனின் எச்சரிப்பின்படி வளர்க்க மறந்து தன் விருப்பப்படி வளர்த்திருக்கிறாள். தோட்டக்காரனின் எச்சரிப்பின்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டு வளர்க்காதபடியினால் அழகான பூ மரம் வாடத்தொடங்கியிருந்தது.

இதை வாசிக்கும் சகோதரியே இவ் வருடத்தின் ஆறு மாதங்கள் கடந்து விட்டன. உன்னுடைய வாழ்க்கையிலும் வாட்டம் காணப் படுகிறதா? ஏன் என் வாழ்க்கையில் இப்படியாக இருக்கிறது என்ற பல கேள்விகளுடன் இருக்கி றாயா? உன் தேவன் உனக்கு பதில் கொடுக்க ஆயத்தமாக இருக்கிறார். **முதலாவது நீ விட்ட தவறை ஏற்றுக்கொள்ள ஆயத்தமா?** தோட்டக் காரனாகிய இயேசு உன்னைத் தேடி மீட்டு எடுத்து ஒரு அழகான பூ மரத்தைப் போல் நீயும் இப் பூமியில் வளரவேண்டும் என்பதற்காய் உன்னை உன் தேவன் நாட்டியுள்ளார். தேவனுடைய எச்சரிப்பின் சத்தத்தைக் கேட்டு அதன்படி வாழாமல் உன் விருப்பப்படி வளர ஆரம்பித்த படியால் தான் உன் வாழ்க்கையில் வாட்டம் காணப்படுகிறது.

என்வாழ்க்கையில்ஆசீர்வாதம்இல்லையே என சிந்திக்கிறாயா சகோதரியே, உன் சிந்தனையை மனோவாவின் பக்கமாக திருப்புவாயாக. **நியாயாதிபதிகள் 13:2-4 (2.) அப்பொழுது தாண் வம்சத்தானாகிய சோரா ஊரானாகிய ஒரு மனுஷன் இருந்தான்; அவன் பேர் மனோவா. அவன் மனைவி பிள்ளைபெறாத மலடியாயிருந் தாள். 3. கர்த்தருடைய தூதனானவர் அந்த ஸ்திரீக்குத் தரிசனமாகி, அவளை நோக்கி: இதோ, பிள்ளைபெறாத மலடியான நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய். 4. ஆதலால் நீ திராட்சரசமும் மதுபானமும் குடியாதபடிக்கும், தீட்டானது ஒன்றும் புசியாதபடிக்கும் எச்சரிக்கை யாயிரு.** மனோவாவின் மனைவி கர்த்தருடைய தூதனின் எச்சரிப்பின் சத்தத்தைக் கேட்டு அதன்படி நடந்தபடியால் மலடி எனப்பட்ட அவள் ஒரு குமாரனைப் பெற்றாள். **நியாயாதிபதிகள் 13:24 பின்பு அந்த ஸ்திரீ ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்குச் சிம்சோன் என்று பேரிட்டாள்; அந்தப் பிள்ளை வளர்ந்தது; கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார்.**

சகோதரியே உன்னு டைய வாழ்க்கையில் ஆசீர்வாதம் வேண்டுமா? **உன் தேவனின் எச்சரிப்பைக் கேட்டு நடக்க ஆயத்தமா? தேவன் உன்னை நாட்டிய தோட்டம் (உன் சபை) தோட்டக்காரனின் (உன் சபையின் போதகர்) எச்சரிப் பின்படி நீ வளர ஆயத்தமா?** சகோதரியே காட்டுப்பகுதியில் வளரும் மலர் அழகாக வீட்டில் வளர்ந்து வருவதற்கான காரணம்? தோட்டக்காரனின் எச்சரிப் பின்படி வளர்க்கப்பட்டபடியால் அழகாக மலர்ந்தது. சகோ தரியே நீயும் உன் குடும்பமும் தேவ எச்சரிப்பின்படி நடந்தால் மனோவாவின் குடும்பம் ஆசீர் வதிக்கப்பட்டது போல் உன் குடும்பமும் ஆசீர்வதிக்கப்படும்.

**எரேமியா 8:5 இவர் கள் செய்யும் ஆராதனை பரலோ கத்திலுள்ளவைகளின் சாயலுக் கும் நிழலுக்கும் ஒத்திருக்கி றது; அப்படியே, மோசே கூடாரத்தை உண்டுபண்ணப் போகையில் மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின் படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்பாற்றிய ஓடுகள்



ஜசிந்தா அக்கா




ஆமையும் நத்தையும் நண்பர்களாக இருந்தனர். அவை இரண்டிற்கும் நீண்ட காலமாக ஒரு மனக்குறை இருந்தது. தங்களால் வேகமாக நடக்கவோ, தாவிக் குதித்து ஓடவோ முடியவில்லை என்ற மனக்குறைவோடும், கவலையோடும் அவை இரண்டும் நடந்து சென்று கொண்டிருந்த போது ஒரு அழகிய வெள்ளை நிற முயல் தாவிக்குதித்து ஓடிவருவதைக் கண்டன. 'முயலே நில்!' என்றது ஆமை; முயல் நின்றது.

'நீ எப்படி இவ்வளவு வேகமாய் தாவிக்குதித்து ஓடுகிறாய்?' என்றது நத்தை. 'இது என்ன கேள்வி? உங்களுக்கு இருப்பது போன்று கனமான ஓடு எனது முதுகில் இல்லை. அந்த சுமை இல்லாததினால் வேகமாக ஓடுகிறேன்' என்று சொல்லிக் கொண்டு அவ்விரண்டையும் கேலியாகப் பார்த்தது முயல். 'ஓ....கோ... எங்கள் வேகக்குறைவுக்கு ஓடு தான் காரணமா?' என்று பாவம் போல கேட்டன நத்தையும் ஆமையும். 'ஆமாம்! நீங்கள் உங்கள் ஓடுகளைக் களற்றிப்போட்டுவிட்டால் என்னைப் போல வேகமாக ஓடலாம். வேகமாக ஓடுவதில் ஒரு அலாதியான சுகம் இருக்கிறது தெரியுமா? அனுபவித்துப்பாருங்கள்' என்றது முயல்.

ஆமைக்கும் நத்தைக்கும் அந்த இடத்திலேயே தாங்கள் ஓடுகளைக் களற்றிவிட வேண்டும் என்ற ஆவல் பிறந்தது. அவற்றைக் களற்ற முயன்ற போது திடீரென்று புதர் மறைவில் ஏதோ அசையும் சத்தம் கேட்டது. ஆமையும் நத்தையும் ஆபத்தை உணர்ந்து தங்கள் ஓடுகளைக் களற்றும் முயற்சியைக் கைவிட்டனர். சட்டென புதர் மறைவிலிருந்து ஒரு ஓநாய் வெளிப்பட்டு முயலை நோக்கிப் பாய்ந்தது. ஆமையும் நத்தையும் வெட்டென்று தங்கள் உடல்களை ஓடுகளுக்குள் இழுத்துக் கொண்டு உயிர்பிழைத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓநாய் முயலைக் கவ்விப் பிடித்துக் கொண்டது. சிறிது நேரம் சென்ற பின்பு ஓட்டைவிட்டு வெளியே வந்த ஆமையும் நத்தையும் முயலின் இரத்தத்தைப் பார்த்து உறைந்து போயின. தாங்கள் வேகமாக ஓடுவதைவிட உயிர் பிழைத்து வாழ்வதே முக்கியமானது என்பதை உணர்ந்து கொண்டன. தாங்கள் எதிரிகளில் இருந்து தங்களைக் காப்பாற்றிய ஓடுகளை நினைத்து தேவனுக்கு நன்றி கூறின.

அன்பான தம்பி, தங்கையரே! உங்களுக்கு இருப்பவை போதும் என்ற மனநிலையோடு இருக்க வேண்டும். இயேசப்பா தம்முடைய பிள்ளைகளாகிய உங்களுக்கு எதைக் கொடுக்கிறாரோ, எதைச் செய்கிறாரோ அது உங்கள் வாழ்வின் நன்மைக்கென்றே செய்கிறார். அதன் உண்மையான அர்த்தத்தை நீங்கள் விளங்கிக் கொள்ளாமல் உங்கள் கண்களும் இருதயமும் விருப்பினதைப் பெற்றுக்கொள்ள விரும்பி, இயேசப்பாவின் விருப்பத்தை அறியாமல் அவரைவிட்டுத் தூரம் போய் பல கஷ்டங்களுக்குள் அகப்பட்டு எனக்கு இது சரியில்லை, எனக்கு அது சரியில்லை என்று அவருக்கு விரோதமாக முறுமுறுப்பதை இயேசப்பா விரும்புவதில்லை. ஆகவே அவர் தந்ததில் மனமகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருங்கள்.

**வெளிப்படுத்தல் 3:11 இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு.**

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

'நாங்கள் பலர். எங்களில் இரு தரத்தார் உண்டு. இரண்டு கூட்டத்தாரும் கனி கொடுக்கிறோம். ஆதாம் – ஏவாளையும் நாங்கள் கண்டிருக்கிறோம். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும் கண்டிருக்கிறோம். எங்களில் ஒராள் இயேசுவைக் காண ஒருவனுக்கு ஒழுங்கு செய்து கொடுத்தார். எங்களில் ஒராள் இயேசுவின் சாபத்தினால் மாண்டு போனார். கர்த்தர் தமது உவமையில் எங்களைப் பற்றி சொல்லியிருக்கிறார். ஆதியாகமத்திலும், வெளிப்படுத்தலிலும் நாங்கள் உண்டு. எங்களுக்கு பெரிய மேன்மை ஒன்றும் இல்லா விட்டாலும் கபடற்ற இஸ்ரவேலன் எனது கீழே இருந்தான்' – நான் யாரென்று சொல்லுங்கள்?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

அனல் 2021 வைகாசி – ஆனி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:

**தாவீது** (1சாமு 16:5-12; 17:28; 27:1.4; 1சாமு 6:20; 15:11; 17:8-14; 16:6-9, 1இராஜா 11:32, 1சாமு 7:9)

விடைகளை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 102, வினா விடை - 104

### சரியான விடை எழுதியவர்கள்

**கனடா**
01. குகன் குடும்பம் +

**ஊர்காவற்றுறை**
02. சி.பசுபதி

* வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
\+ குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# அருட்பணியாளர் சரிதை

## பிலிப்பு நேரியார்
## 1513 - 1595



### அதிகம் பேசாதீர்கள்...

மனிதர்களில் சிலர் எப்பொழுதும் பேசிக்கொண்டே இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவர். அதிலும் வேடிக்கை என்ன வென்றால் பிறரைக் கெடுத்துப் பேச வேண்டும் என்றே தன் காலத்தை அழிப்பவர்களும் உண்டு. அதில் அவர்களுக்கு ஒரு அலாதி இன்பம்.

இப்படிப்பட்ட பெண் ஒருவர் பிலிப்பு நேரியாரிடம் வந்தாள். அப்பெண்ணைத் திருத்த நினைத்த அவர், சந்தைக்குச் சென்று ஒரு கோழி வாங்கி வரச் சொன்னார். அக்கோழியின் சிறகுகளை வழி நெடுகப் பிய்த்துப் போட்டு வரும்படி கூறினார். அவள் திரும்பி வந்ததும் நீ போய் அந்த சிறகுகளை பொறுக்கிக் கொண்டு வா என்று கூறினார். உடனே அவள் அது எப்படி முடியும்? சிறகுகளெல்லாம் காற்றில் அங்கும் இங்குமாகப் பறந்து சென்றிருக்குமே என்று கூறினாள். அப்பொழுது, அவர் அவளிடம் இதுபோலவே நீ பிறரைக் கெடுத்துப் பேசும் சொற்களும் திரும்பப் பெற முடியாது. அவை கொடிய தீமைகளை விளைவிக்கும் என்றார். அப்பெண், தன் தவறை உணர்ந்தவளாக மனம் வருந்தி மன்னிப்பு கேட்டாள்.

பிலிப்பு நேரியார் இத்தாலியைச் சார்ந்த பிரான்சிஸ்கோ என்பவரின் மகன். மக்களை ஏராளமாக மோட்சத்தில் சேர்க்க விரும்பிய இவர் ஒரு சபையை ஏற்படுத்தினார். இளைஞர்கள் பலரை ஆன்மீகத்தில் வழி நடத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெபத்திலும், தவத்திலும் தம்மை மிகவும் ஈடுபடுத்தினார். நலிவுற்ற மக்களின் நலன் கருதி அவர்களுக்கு உதவி செய்தார். நோயாளிகளை மருத்துவ மனைகளில் சந்தித்தார். மிகவும் நகைச்சுவையோடு பேசும் இவர், தன்னை நாடி வரும் அனைவரையும் சிரிக்கவும், சிந்திக்கவும் வைப்பார்.

ஆழமான இறை அனுபவம், தாழ்ச்சி, தன்னை வெறுத்தல், ஆசைகளைக் கட்டுப்படுத்துதல் ஆகிய இவற்றைத் தாமும் கடைப்பிடித்து, தன்னை நாடி வருபவர்களும் கடைப்பிடிக்கச் செய்தார். ஒரு பெரிய மனிதர் இவரைப் பார்க்க வந்தார். அருகில் இளைஞர்கள் கூச்சலிட்டனர். அதைப்பற்றி அவர் முறையிட்ட போது, இளைஞர்கள் வேண்டுமானால் என் முதுகின் மேல் விறகுகள் கீறட்டும் ஆனால் அவர்கள் பாவம் மாத்திரம் செய்யக்கூடாது என்றார். இளைஞர்களின் நண்பனான இவர், ரோம் நகரின் இரண்டாம் அப்போஸ்தலன் ஆவார்.

**அன்பரே! தீமையான பேச்சுக்களை விட்டுவிலகிவிட்டீரா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: சிறு குற்றங்களையும் கவனத்துடன் விலக்கி நட. சிறு குற்றங்களை பயமின்றி செய்கிறவன், பெரிய குற்றங்களுக்கு உள்ளாவான். — பிலிப்பு நேரியார்.**

நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜூலை 22

---

## சின்சென்டார்ப் பிரபு
## 1700 - 1760



## வார்த்தைக்கு செவிகொடுங்கள்...

'உனக்காக நான் மரித்தேனே, எனக்காக நீ என்ன செய்தாய்?'

இவ்வாக்கியத்தை நீங்கள் அடிக்கடி பார்த்திருக்கவும், கேட்டிருக்கவும் கூடும். ஆனால் இது ஒரு மிஷனெரி சங்கத்தை ஏற்படுத்தி அநேக மிஷனெரிகளை உருவாக்கி அனுப்பியதைக் குறித்து உங்களுக்குத் தெரியுமா?

மொரோவியன் சகோதர ஐக்கிய கூட்டத்தார். இது ஒரு மிஷனெரி ஸ்தாபனம். பலவிதமான துன்பங்களும், பாடுகளும் நிறைந்த, மிகவும் கடினமான தேசங்களுக்குச் சென்று சுவிசேஷத்தை பிரசங்கித்து வருபவர்கள் இவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மிஷனெரி ஸ்தாபனத்தை ஆரம்பித்தவர் ஓர் பெரிய பிரபு. இளமையில் தெய்வ அன்பு இல்லாதவராக வளர்ந்து வந்தார். ஆனால் ஒரு நாள் தன் ஊரிலிருக்கும் ஓவியக்கண்காடசிக்கு சென்றார். அங்கே பற்பல படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. திடீரென்று ஒரு படம், இவரின் கண்ணில் பட்டது. அதிகமாக இவர் இதயத்தை அப்படம் ஊடுருவி பாய்ந்தது. அது சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் உருவப்படம். அப்படத்தின் கீழ் இந்த வாசகம் 'இவையெல்லாவற்றையும் உனக்காக சகித்தேன். நீ எனக்காக என்ன செய்திருக்கிறாய்?'

இதைப் பார்க்க பார்க்க அப்பிரபுவின் உள்ளம் உருகியது. இதயம் இளகியது. கண்களில் கண்ணீர் வழிந்தது. சிந்தனையில் சிறப்பான திட்டம் மலர்ந்தது. தன்னை இயேசுவுக்கு கையளித்தார் அவர்.

சின்செண்டார்ப்பிரபு என்பவரே அவர். தன் சொத்துக்கள் அனைத்தையும், ஊழியப் பணிக்காக செலவிட்டார். மொரோவிய மிஷனெரி சங்கம் உருவானது. பல நாடுகளுக்கும் சுற்றுப்பயணம் சென்று தனக்கு புதுவாழ்வு தந்த கிறிஸ்துவை மக்களுக்கு அறிவித்தார்.

மொரோவிய சங்கத்தால் பேராயராக அபிஷேகம் பண்ணப்பட்ட இவர் 1741 ஆம் ஆண்டு அமெரிக்காவுக்குச் சென்று அங்கு பெரும் மறுமலர்ச்சி ஏற்படக் காரணமானார்.

**அன்பரே! இயேசுவின் வார்த்தைகள் உங்களை எதைச் செய்ய தூண்டியிருக்கிறது.**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: உனக்காக நான் மரித்தேனே, எனக்காக நீ என்ன செய்தாய்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" நவம்பர் 17**

---

## சரியான பதில்கள்
## வினாவிடை 104

01. ஏசா - ஆதியாகமம் 25:27
02. 1பேதுரு 2:16
03. குணசாலியான ஸ்திரீ - நீதிமொழிகள் 12:4
04. பின்மாற்ற இஸ்ரவேலர் - எரேமியா 6:30
05. எலிசா - 11இராஜாக்கள் 2:25; 4:25
06. எரிகோ - யோசுவா 6:1
07. 1கொரிந்தியர் 15:31
08. பிள்ளைகளின் பிள்ளைகள் - நீதிமொழிகள் 17:6
09. எலியா - 1இராஜாக்கள் 18:22,40
10. ஒபதியா 7

---



**சரியான விடை எழுதியவர்களில்**
**பாராட்டுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:**

**வினாவிடை - 104**
சி.பசுபதி
(ஊர்காவற்றுறை)

**குறுக்கெழுத்துப் போட்டி - 102**
குகன் குடும்பம்
(கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 01 | | | |
| 03 | | | | | 02 | | | |
| | | 04 | | | | | | |
| 06 | | | | | | | | 05 |
| | | | | 07 | | | | |
| 08 | | | | | | | | |
| | | | | 09 | | | | |
| 10 | | | | | | | | |
| | | | | | | | 11 | 12 |

## குறுக்கெழுத்துப் போட்டி 103

**இடமிருந்து வலமாக**

1. தாவீதுக்கு தெரியாமல் யோவாப் கொன்று போட்ட இரண்டு படைத்தலைவர்களில் ஒருவன்
3. 'இத்தனை பெரிய காரியத்தைச் செய்ய நாயாகிய உமது அடியான் எம்மாத்திரம்' எனக் கூறியவன்
6. இசக்கார் கோத்திரத்திலிருந்து கானானுக்கு அனுப்பப்பட்டவர்
8. இவர் மனைவியின் பெயர் மில்க்காள்
10. தனக்கு இருப்புக்கொம்புகளை உண்டாக்கி தீர்க்கதரிசனம் சொன்னவர்

**வலமிருந்து இடமாக**

1. எலெயாசாரின் அப்பா
4. 'தனக்குப் பயமுண்டாக்கப் பார்த்தவர்களை நினைத்துக் கொள்ளும்' என்று தேவனிடம் கூறியவன்
7. தேவன் தன்னோடே பேசின ஸ்தலத்திற்கு பெத்தேல் எனப் பெயரிட்டவர்
9. அதோனிகாமின் கடைசிப் புத்திரரில் எருசலேமுக்கு வந்த மூவரில் ஒருவர்.
12. பாபிலோனிலுள்ள எல்லாஞானிகளையும் கொலை செய்யும்படி கட்டளையிட்டவன்

**மேலிருந்து கீழாக**

1. இவன் ஆலோசனையை பயித்தியமாக்கும்படி தாவீது கர்த்தரிடம் வேண்டினான்
2. 'ஞானத்தைப் பெற்றுக்கொள்ளுகிறவன் தன் ..... சிநேகிக்கிறான்'
5. மோசே சொன்னபடி காலேபுக்குக் கொடுக்கப்பட்ட இடம்

**கீழிருந்து மேலாக**

5. 'நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம்' எனக் கூறியவள்
9. இஸ்ரவேல் ஜனம் பெலிஸ்தரைக் கண்டு ஓடினபோது தாவீதோடே இருந்தவன்
11. ..............உறுதியாய்ப் பற்றிக்கொள்,அதைவிட்டுவிடாதே அதைக் காத்துக்கொள், அதுவே உனக்கு ஜீவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போதகர் ஜோஹணன் டேவிஸ் பிலிப்,
தலைமைப் போதகர், சீயோன் தேவாலயம், இலங்கை.




ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அனல் வாசகர்கள் அனைவருக்கும் மனதார அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**2021ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரைக்கும் கர்த்தர் நம்மை 'அதிசயமாய்' நடத்தி வந்திருக்கிறார். முழு உலகமும் பயங்கரமான, இருள் நிறைந்த காலத்திற்கூடாக கடந்து சென்று கொண்டிருக்கும் இந் நாட்களில் ஆபகூக் தீர்க்கதரிசியின் வார்த்தைகளை நினைவுபடுத்த விரும்புகிறேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆபகூக் 3:2 கர்த்தாவே, நீர் வெளிப்படுத்தினதை நான் கேட்டேன், எனக்குப் பயமுண்டாயிற்று; கர்த்தாவே, வருஷங்களின் நடுவிலே உம்முடைய கிரியையை உயிர்ப்பியும், வருஷங்களின் நடுவிலே அதை விளங்கப்பண்ணும்; கோபித்தாலும் இரக்கத்தை நினைத் தருளும்.**

ஆகவே இவ் வருட நடுவில் நிற்கும் நமது ஜெபமும் ஆண்டவரே உம்முடைய கிரியையை உயிர்ப்பியும், அதை விளங்கப்பண்ணும் என்பதாகவே இருக்கிறது.

இவ் வருட ஆரம்பத்தில் கர்த்தர் நமக்கு கொடுத்த நிபந்தனை; **மல்கியா 4:2 ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்.** ஆம் நாம் ஆண்டவருடைய நாமத்திற்கு **'பயப்படவேண்டும்'** என்பதே. **உபாகமம் 28:58 உன் தேவனாகிய கர்த்தர் என்னும் மகிமையும் பயங்கரமுமான நாமத்திற்குப் பயப்படும்படிக்கு, ...**

இன்று நாம் வாழும் உலகம் தெய்வ பயம் அற்ற உலகம். கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுபவர்களும் கூட ஆண்டவருடைய நாமத்திற்கு பயந்த வாழ்வு வாழாமல் ஆண்டவருடைய நாமம் தூஷிக்கப்படும்படியான சாட்சியற்ற வாழ்வு வாழ்வதைக் காணும் போது மிகவும் கவலையும், மனவருத்தமாகவும் இருக்கிறது.

எனவே இவ் வருட நடுப்பகுதியில் நிற்கும் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்வை ஆராய்ந்து பார்ப்பது மிகவும் நல்லது. எமது தனிப்பட்ட வாழ்வு, குடும்ப வாழ்வு என்பன ஆண்டவருக்கு பயந்து காணப்படுகிறதா? நாம் நினைத்ததைப் போன்று வாழ்கிறோமா? வீட்டில் ஒரு வாழ்வு – வீதியில் ஒரு வாழ்வு – திருச்சபையில் இன்னொரு வாழ்வு என்று மாய்மாலமான வாழ்வு வாழ்கிறோமா?

இப்படிப்பட்ட இருள் நிறைந்த, தெய்வபயமற்ற உலகத்தில் / மனிதர்கள் மத்தியில் வாழும் நாம் **'வித்தியாசமானவர்கள்'** என்று அல்லது தேவனுடைய நாமத்திற்குப் பயந்தவர்கள் என்று எம்மை அடையாளப்படுத்தத் தக்கதாக எமது வாழ்வு அமைய வேண்டும். உதாரணமாக தானியேல் என்பவன் தான் வித்தியாசமானவன் என்பதை அடிமையாக கொண்டு செல்லப்பட்ட பாபிலோன் ராஜாவின் அரன்மனையில் கூட காண்பிக்கத்தவறவில்லை. ஏன் தேவ பிள்ளைகளால் தாங்கள் வித்தியாசமானவர்கள் என்பதை காண்பிக்க முடியாது? நீங்கள் வேலை செய்யும் வேலை ஸ்தலங்களில் ஏதாவது நிகழ்வுகளில் மதுபானம் பரிமாறப்படும் போது அதற்கு விலகியிருந்து நீங்கள் வித்தியாசமானவர்கள் என்பதைக் காண்பியுங்கள். அந்நிய பண்டிகைகளில் அவர்கள் செய்வதற்கு உடன்படாது நீங்கள் வித்தியாசமானவர்கள் என்பதைக் காண்பியுங்கள். அந்நிய திருமண நிகழ்வுகளுக்கு செல்லும் போது தேவனை அறியாத மற்றைய ஜனங்களைப் போல நீங்கள் செய்யாதீர்கள். நீங்கள் அப்படிப்பட்ட காரியங்களுக்கு விலகி நடக்கும் போது தேவ சாயலாய் மாறிக் கொண்டிருக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றீர்கள். இப்படிப்பட்ட காரியங்களுக்கு விலகி நடக்காமல் அதற்கு உடன்படு வீர்களாய் இருந்தால் உலகம் உங்களை ஏற்றுக் கொள்ளும்; ஆனால் ஒரு நாள் வரும் அந் நாளில் நீங்கள் தேவனால் கைவிடப்பட்டவர்களாய் மாறிவிடுவீர் கள். ஆகவே மற்றவர்களுக்கு நாம் வித்தியாசமானவர்கள் என்பது புலப் படத்தக்கதாக ஓர் சாட்சியுள்ள, உண்மைத்துவமான ஆண்டவருக்குப் பயந்த வாழ்வு வாழ்வதற்கு எம்மை முற்றுமாக அர்ப்பணிப்பது மிக மிக அவசியம்.

**நீங்கள் ஜீவனுள்ள தேவனுக் குப் பயந்தவர்கள் அல்லது வித்தி யாசமானவர்கள் என்பதை மற்றவர் கள் எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்?**

## 01. அவர் வழியில் நடப்பதைக் காணும் போது.

**உபாகமம் 8:6 ஆகையால், உன் தேவனாகிய கர்த்தருடைய வழிகளில் நடந்து, அவருக்குப் பயப் படும்படிக்கு, அவருடைய கற்பனை களைக் கைக்கொள்ளக்கடவாய்.** ஆண்டவருடைய வழிகள் முற்றிலும் வித்தியாசமானது. அது உன்னதமான வழி. அவர் தன்னுடைய வழியை நமக்கு முன் வைத்துப்போயிருக்கிறார். பாவங்களை அறிக்கையிட்டு, அவருடைய பிள்ளைகளாகி மனிதர்கள் வாழ வேண்டும் என்று தேவன் எதிர்பார்க் கிறார். நாம் அவருடைய பரிசுத்த வழியில் நடக்க வேண்டும்.

**நீதிமொழிகள் 14:12 மனுஷனுக் குத் செம்மையாய்த் தோன்றுகிறவழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்.**

உலகத்திற்கு அல்லது மனிதர் களுக்கு என்று ஓர் வழி உண்டு. ஆனாலும் அதில் நடந்தால் அதன் முடிவு மரணவழிகளே. **நாம் பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலுக்கு எம்முடைய வாழ்வை அர்ப்பணிக்க வேண்டும்.** தெய்வ பயம் மனிதனுடைய வழிகளில் வரும் போது மாத்திரமே அவன் ஆண்டவருடைய வழிகளில் நடப்பான்.

ஆகவே இவ் ஆண்டில் ஆண்டவர் நமக்கு நியமித்த நிபந்த னையை அவருடைய நாமத்திற்குப் பயப்படுவதை வைத்து எவ்வாறு வெளிப்படுத்தலாம் என்றால் எப்போதும் எல்லா சூழ்நிலையிலும் கர்த்தருடைய பரிசுத்த வழியில் நடக்க வேண்டும்.

## 02. ஆராதனையை அவர் ஒருவருக்கு மாத்திரமே செலுத்தும் போது

**உபாகமம் 6:13 உன் தேவனா கிய கர்த்தருக்குப் பயந்து, அவருக்கே ஆராதனைசெய்து, அவருடைய நாமத் தைக்கொண்டே ஆணையிடுவாயாக.**

**உபாகமம் 10:12 இப்பொழு தும் இஸ்ரவேலே, நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளி லெல்லாம் நடந்து, அவரிடத்தில் அன்பு கூர்ந்து, உன் முழு இருதயத்தோடும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உன் முழு ஆத்துமாவோடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவித்து.**

பிரியமானவர்களே, நாம் ஜீவனுள்ள ஆண்டவரை ஆராதிக்கும் படியாகவே அழைக்கப்பட்டிருக்கிறோம். **ஏசாயா 43:21 இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லிவருவார்கள்.** ஆண்டவர் எம்மை ஏற்படுத்தியது, உருவாக்கியது, இரட்சித்தது என்பவற்றின் பிரதான நோக்கம் அவரை துதிப்பதற்கும் ஆராதிப்பதற்கும் மாத்திரமே.

எனவே எங்களுடைய ஆராதனை அவர் ஒருவருக்கு மாத்திரமே செலுத்தப்பட வேண்டும். இன்றைய உலகத்தில் அனேகருக்கு இருமனம் காணப்படுகிறது. ஆண்டவரை தேடுவது மாத்திரமல்ல உலகத்தையும் தேடும் நிலையைக் காண்கிறோம். எதற்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அது தான் நமது வாழ்வில் ஆராதிக்கப்படத்தக்க ஒன்றாக மாறிவிடுகிறது. அண்மைய நாட்களில் சில காரியங்களை நான் அவதானிக்கும் போது, கர்த்தருக்கென்று தேவ சமூகத்தில் அர்ப்பணிக்கப்பட்ட பிள்ளைகள் சிலர் கூட தங்கள் முகப்புத்தகத்தில் *(Facebook) 'Fassion is my Drugs'* 'நாகரீகமே எனது போதை' என்று பதிவிட்டிருப்பதை கண்டு மிகவும் வேதனைப்பட்டேன். தேவன் எவ்வளவாய் வேதனைப்படுவார் என்பதை புரியாமல் உலகத்தோடு ஒத்து வாழ்கிறார்கள். பிரியமானவர்களே தேவனுக்குப் பயப்படும் பயம் எங்கே? தேவனை ஆராதிக்காமல் உலகத்தை நேசிப்பது மாத்திரமல்ல அதை ஆராதிக்கிறார்கள். எனவே நாம் செலவிடும் நேரங்களைக் குறித்தும் கரிசனை எடுக்க வேண்டும்.

## 03. கர்த்தருக்குரியதில் கரிசனை காண்பிக்கும் போது

**உபாகமம் 14:22-23 (22.) நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு எப்பொழுதும் பயந்திருக்கப் பழகும்படிக்கு, வருஷந்தோறும் நீ விதைக்கிற விதைப்பினாலே வயலில் விளையும் எல்லாப் பலனிலும் தசமபாகத்தைப் பிரித்து, 23. உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே, உன் தானியத்திலும் உன் திராட்சரசத்திலும் உன் எண்ணெயிலும் தசமபாகத்தையும் உன் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும் அவருடைய சந்நிதியில் புசிப்பாயாக.**

தசமபாகம், காணிக்கை மற்றும் கர்த்தருக்குரிய காரியங்களில் மிகக் கவனமாக இருக்க வேண்டும். கர்த்தரை வஞ்சிக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும். எமது வாழ்வில் எல்லாக் காரியங்களிலும் அதாவது பொருளாதார காரியங்களில் மாத்திரமல்ல எமது முதற்பாகம் அனைத்தும் கர்த்தருக்குரியவை. அதை நாம் எப்படிச் செலுத்துகிறோம் என்பதில் நாம் கர்த்தருக்குப் பயப்படும் பயம் தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று தசமபாகம் – காணிக்கை என்பவை குறித்து பேசுவதற்கு அனேகருக்கு விருப்பமில்லை. அதைக் குறித்து பேசக்கூடாது, அது தவறான காரியம் என்று அனேக விளக்கங் களைக் கொடுக்க முடியும். ஆனால் நாம் விரும்பினால் என்ன விரும்பா விட்டால் என்ன அது மிக மிக முக்கிய மானது என்பதை வேதம் தெளிவாகக் காண்பிக்கிறது. காணிக்கை — தசமபாகங்களைக் குறித்து பேசுவதும் ஒரு போதகருடைய கடமையே.

இது நமது தனிப்பட்ட விடயம், இதில் யாரும் தலையிட முடியாது என்றும் சிலர் நினைக்க முடியும். ஆனால் வேதாகம ஒழுங்கை தேவ பிள்ளைகளுக்குள் புகுத்த வேண்டிய கடமையும் பொறுப்பும் போதகருக் குரியது. எனவே கர்த்தருக்குரியதை கர்த்தருக்கு மாத்திரமே செலுத்த வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை.

**உபாகமம் 14:23 உன் தேவனா கிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே,...** எந்த இடத்திலே கர்த்தர் உங்களை அழைத்து நிலைக்கப்பண்ணியிருக்கி றாரோ அந்த இடத்தில் எமது வாழ்வின் முதல் பலன்களை கர்த்தருக்கு செலுத்த ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.

# 04. எமது பிள்ளைகளை அவதானிக்கும் போது

**உபாகமம் 4:9 ஓரேபிலே உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நீ நிற்கும்போது, கர்த்தர் என்னை நோக்கி: ஜனங்களை என்னிடத்தில் கூடிவரச்செய்து, என் வார்த்தைகளை அவர்கள் கேட்கும்படி பண்ணுவேன்; அவர்கள் பூமியில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் எனக்குப் பயந்திருக் கும்படி அவைகளைக் கற்றுக்கொண்டு, தங்கள் பிள்ளைகளுக்கும் போதிக்கக் கடவர்கள் என்று சொல்லிய நாளில்,**

**கர்த்தர் இப் பூமியில் நமக்கு கொடுத்திருக்கும் பிள்ளைகளை எவ்வாறு வளர்த்தெடுக்கிறோம் என்பதின் மூலம் நாம் தேவனுக்குப் பயப்படுகிறவர்களா? அல்லது தேவனுக்குப் பயப்படாதவர்களாக? என்பதைக் கண்டு கொள்ள முடியும்.**

எமது பிள்ளைகள் தான், அவர்கள் எமது கர்ப்ப பிறப்புகள் தான் ஆனாலும் கிறிஸ்தவர்களாக எமக்கு நன்கு தெரியும்; **சங்கீதம் 127:3 இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்.**

எனவே தேவன் நம்மை நம்பி நம்முடைய கரத்தில் கொடுத்திருக்கும் அவருடைய சுதந்தரங்களாகிய எமது பிள்ளைகளை நாம் கர்த்தரைக் குறித்த அறிவுடன் போதித்து வளர்த்தெடுக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். தேவ ஒழுக்கம், தேவனுக்குப் பயப்படும் பயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன தானாக அல்லது இயற்கை யாகவே ஒருவருக்குள் உருவாகாது. மாறாக அது பிள்ளைகளுக்குள் புகுத்தப்பட வேண்டும் - அல்லது கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அது ஒவ்வொரு பெற்றோருடையதும் தலையாய கடமையாகும்.

நமது தலைக்கு மேல் பிள்ளை கள் வளர்ந்துவிட்டார்கள் என நினைத்து, எம்மைவிட தற்போதைய உலகத்தை அவர்கள் நன்றாக அறிந்து வைத்திருக்கி றார்கள் என நினைத்து அவர்களுக்கு போதித்து, ஒழுக்கத்திற்குள் அவர்களை வளர்க்க இன்று அனேக பெற்றோர் தவறிவிடுகிறார்கள்.

பிள்ளைகள் அணியும் ஆடைகள், அவர்களது தலை அலங்காரங்கள், அவர்கள் பிரதிபலிக்கும் செயற்பாடு களை அவதானித்தால் அவை தாறு மாறாக, அவலட்சணமாக இருந்தால் அது எதை வெளிப்படுத்துகிறது என்றால் அவர்கள் தங்கள் பெற்றோருக்குப் பயப்படவில்லை என்பதையே. எனவே பெற்றோரே மிகவும் ஜாக்கிரதை. கர்த்தர் உங்களுக்கு கொடுத்த பிள்ளைகளை சரிவர வளர்த்தெடுங்கள். கர்த்தர் பெற்றோர்களாகிய உங்களிடம் தான் அவர்களைக் குறித்து கணக்கு கேட்பார்.

இன்னும் அனேக விடயங் களைக் கூறமுடியும். ஆனாலும் உபாகமத்தில் இருந்து பார்த்த சில விடங்களை மாத்திரமே காண்பித்திருக் கிறேன்.

ஆண்டவருக்குப் பயப்படும் பயம் எமக்கு இருக்க வேண்டும் என்று இவ் வருடம் நிபந்தனையாகப் பெற்றுக் கொண்ட நாம் தேவனுக்குப் பயப்படு கிறவர்கள் என்பதைக் காண்பிக்க அல்லது செயற்படுத்த;

1. எச் சந்தர்ப்ப சூழ்நிலையிலும் ஆண்டவருடைய வழிகளில் மாத்திரமே நடக்க வேண்டும்.


2. எமது ஆராதனை அவர் ஒருவருக்கு மட்டுமே எப்போதும் செலுத்த வேண்டும்.

3. கர்த்தருக்குரிய பங்கை மிகவும் ஜாக்கிரதையாக அவருக்கு செலுத்தி உதாரத்துவமாய் வாழ வேண்டும்.

4. எமது பிள்ளைகளின் சாட்சியான ஜீவியத்திற்கு நாமே காரணம்.

எம்மையும் எமது வாழ்வையும் ஆராய்ந்து, எமது வாழ்வை அவருக்கு அர்ப்பணிப்போம். அவருடைய வருகை மிகவும் சமீபமாயிருக்கிறது! ஆயத்தமா வோம்!! ஆயத்தப்படுத்துவோம்!!!.

**"தேவன் தாமே**
**உங்களை நிறைவாக**
**ஆசீர்வதிப்பாராக.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குணங்கள் மாறுமா?

சிலர் கறுப்பாக இருப்பதை விரும்புவதில்லை. ஆனாலும் கறுப்பை வெள்ளையாக்க முடியாது. சிலர் குட்டையாக இருப்பதற்காக வருந்துகின்றார்கள். ஆனால் குட்டையை நெட்டையாக்க முடியாது. சிலர் மிகவும் உயரமாக இருப்பதற்காக கவலைப்படுகிறார்கள். ஆனால் உயரத்தைக் குறைக்க முடியாது. இது போல நம்மிடம் கோபம், பெருமை, பொறாமை, வெறுப்பு, தவறான ஆசை போன்ற தவறான குணங்கள் இருக்கக்கூடும். இவைகளை நாம் விரும்ப முடியாது. ஆனால் இவைகளை நாம் மாற்ற முடியும்? எப்படி? இதுபோன்ற தவறான குணங்களை கர்த்தராகிய இயேசு நம்மை விட்டு மாற்றி விடுவார். அவரை நம்முடைய இருதயத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவரிடம் நம்மிடமுள்ள தவறான குணங்களைச் சொல்ல வேண்டும். அவைகள் நீங்கிட ஜெபிக்க வேண்டும். அப்பொழுது அவைகள் நம்மை விட்டு நீங்கும்.

**சிந்தனைக்கு:-**

**இயேசு நம்முடைய இருதயத்தில் வந்தால், நம்மிடமிருக்கும் தவறான குணங்கள் எல்லாம் வெளியே போய்விடும்.**

நன்றி: 'சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள் – மே 03

# அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / **ZION CHURCH** என எழுதப்பட வேண்டும்)

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 245.00 |
| இந்தியா (India) | 490.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 1015.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 525.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 510.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 850.00 |

சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:.............................................

முகவரி:...........................................

....................................................

....................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org